**<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>**

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.P.குமார் சிங்,<br>ஆணையாளர்,<br>நகராட்சி அலுவலகம்,<br>கடையநல்லூர். | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்<br>திருநெல்வேலி. |

**ந.க.எண். 45/2020/சி1** **நாள்: .12.2020**

**அய்யா,**

**பொருள்:-** நகர்மன்ற கூட்டம் – கடையநல்லூர் நகராட்சி – அவசரக் கூட்டம் 03.11.2020 அன்று நடைபெற்றது– கூட்ட நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்கள் விவரம் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

*****

கடையநல்லூர் நகராட்சியில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் 03.11.2020 அன்று அவசரக் கூட்டம் நடத்தப்பட்டது. மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் பார்வைக்காக இத்துடன் இணைத்து பணிந்து அனுப்பி வைக்கப்படுகிறது.

**ஆணையாளர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**

**இணைப்பு –** தீர்மான நகல்கள்

**கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம்– 2020ம் ஆண்டு நவம்பர் மாதம் 03ம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.**

**பொருள் எண்.1**

கடையநல்லூர் நகராட்சியில் சிறப்பு சாலைத்திட்டம் (**Special Road Programme**)-2020–21ன் கீழ் ரூ.2.00 கோடிக்கு சாலைப்பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் குறுஞ்செய்தியில் மதிப்பீடுகள் தயார் செய்து அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நகராட்சி பகுதியில் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் (kfw) கீழ் பகிர்மான குழாய்கள் அனைத்து தெருக்களிலும் பதிக்கப்பட்டு பணிகள் முடிவடைந்து சேதமான சாலைகள், பதிக்கப்பட்ட பகிர்மான குழாய்களில் வீட்டு இணைப்புகளை மாற்றியமைத்ததால் சேதமான சாலைகள் மற்றும் மழை போன்ற இயற்கை இடர்பாடுகளால் சேதமுற்ற சாலைகளை கணக்கீடு செய்து ரூ.200.00 இலட்சத்திற்கு கீழ்கண்ட சாலைப் பணிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் பெயர் | நீளம் மீட்டரில் | அகலம் மீட்டரில் | மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.01 குமந்தாபுரம் வடக்குவிளை காலனித் தெரு , வார்டு எண்.02 முப்புடாதியம்மன் கோவில் வடக்குத் தெரு (பிரிதியங்கிரி அம்மன் கோவில் தெரு), கிருஷ்ணாபுரம் பிராமின் சுடுகாடு செல்லும் பாதை, வார்டு எண்.21 கிருஷ்ணன் கோவில் தென்வடல் தெரு, வார்டு எண்.22 கண்ணார் தெற்குத் தெரு ஆகிய தெருக்களில் தார்சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண். 32 ரகுமானியாபுரம் 8வது தெரு, 9வது தெரு மேற்கு பகுதி, வார்டு எண். 29 நத்தஹர் பள்ளிவாசல் தெரு, மதினாநகர் 10வது தெரு , வார்டு எண்.11 காளியம்மன் கோவில் தெற்குத் தெரு , வார்டு எண்.21 நடுத்தெரு ஆகிய தெருக்களில் பேவர்பிளாக் கல் சாலை அமைக்கும் பணிகள் | 1.852 | 3.00 M to 4.00 M | 100.00 |
| | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.22 இந்திராநகர் புதிய காலனி குறுக்குத் தெருக்கள், மங்கம்மாள் சாலை குறுக்குத்தெருக்கள், வார்டு எண். 32 ரகுமானியாபுரம் 10வது தெரு , 11வது தெரு மேற்கு பகுதி, வார்டு எண்.33 மக்காநகர் குறுக்குத்தெருக்கள், மலம்பாட்டை ரோடு குறுக்குத் தெருக்கள், வார்டு எண்.09 பருத்திவிளைத் தெரு கிழக்கு பகுதி மற்றும் வார்டு எண்.21 கிருஷ்ணன் கோவில் சன்னதி தெரு ஆகிய தெருக்களில் மழைநீர் வடிகால் கட்டி பேவர்பிளாக் கல் சாலை அமைக்கும் பணிகள் | 1.502 | 3.00 | 100.00 |
| | மொத்தம் | **3.354** | | **200.00** |

மேற்காணும் சாலை பணிகளை பொதுமக்களின் நலனை கருத்திற்கொண்டு அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி செய்ய வேண்டியுள்ளதால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு சிறப்பு சாலைத்திட்டம் (**Special Road Programme**)-2020–21ன் கீழ் அரசு மானியமாக பெற்று மேற்காணும் சாலை பணிகளை செய்திட தயார் செய்யப்பட்டுள்ள திட்ட பிரேரணைக்கு அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண்.4251/2020/இ1)**

**தீர்மான எண். 268**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 2**

கடையநல்லூர் நகராட்சி – தூய்மை இந்தியா திட்டத்தின் (SBM) கீழ் வார்டு எண்.33 மேற்கு மலம்பாட்டை ரோடு கிருஷ்ணாபுரத்தில் பசுமை நுண்ணுயிர் உரக்குடில் மையம் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்நிலையில் மேற்காணும் பசுமை நுண்ணுயிர் உரக்குடில் மையத்தினை சுற்றி பாதுகாப்பு மற்றும் முன்புற கேட் அமைக்கப்படாததால் இரவு நேரங்களில் சமூக விரோதிகளின் கூடாரமாகவும் பகல் நேரங்களில் விலங்குகள் உள்ளே சென்று காய்கறி செடிகளை நாசம் செய்தும் வருகின்றன. ஆகவே இதனை தடுக்கும் பொருட்டு மேற்காணும் பசுமை நுண்ணுயிர் உரக்குடில் மையத்தின் வட பகுதி மற்றும் கிழக்கு பகுதிகளில் சுற்றுச்சுவர் மற்றும் முன்புற கேட் ரூ.985000/–உத்தேச மதிப்பீட்டில் அமைக்கும் பணியினை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவீனத் தொகையினை இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.3597/2020/இ1)**

**தீர்மான எண். 269**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 3**

கடையநல்லூர் நகராட்சி கல்லாறு தலைமை பணியிடத்தினை சுற்றி சுற்றிச்சுவர் வசதிகள் இல்லை. மேற்காணும் பகுதியில் நகருக்கு குடிநீர் ஆதாரம் உள்ளதால் மேற்படி இடத்தினை அணுகுவதற்கு தார்சாலை வசதிகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளதால் கல்லாறு தலைமை பணியின் சுற்றுலா தலமாக மாறிவருகின்றது. மேலும் மேற்காணும் தலைமை பணியிடம் நகருக்கு குடிநீர் விநியோகம் ஆதாரமாக விளங்குவதால் பொதுமக்கள் யாரும் உள்ளே நுழையாதவாறு அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி கல்லாறு தலைமை பணியிடத்தினை சுற்றி வடக்கு மற்றும் கிழக்கு பகுதியில் சுற்றுச்சுவர் வசதிகள் செய்யும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.9,98,000/–க்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவீனத் தொகையினை இந்நகராட்சி குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.3124/2020/இ1)**

**தீர்மான எண். 270**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 4**

கடையநல்லூர் நகராட்சி கல்லாறு தலைமை பணியிடத்திற்கு காவலர் அறை வசதிகள் ஏதுமில்லை. இந்நிலையில் மேற்காணும் தலைமையிடத்தில் இரவு பணிகள் ஈடுபடும் காவர்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். மேலும் இரவு நேரங்களில் காட்டு விலங்குகள் நடமாட்டம் அதிகமாக உள்ளதால் இரவு காவல் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு பாதுகாப்பின்றி உள்ளதால் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி கல்லாறு தலைமை பணியிடம் பகுதியில் புதிதாக காவலர் அறை அமைக்கவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.9,75,000/–க்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவீனத் தொகையினை இந்நகராட்சி குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.3125/2020/இ1)**

**தீர்மான எண். 271**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 5**

கடையநல்லூர் நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள பசுமை நுண்ணுயிர் உரக்குடில் மையங்களிலுள்ள திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்க்கொள்ள Battery

Operate Vehicle (BOV) வாகனங்கள் வாங்கப்பட்டு மேற்காணும் பணிகளுக்கு பயன்படுத்திவரப்படுகின்றது. மேலும் 50 எண்ணம் BOV வாகனங்களில் பழுதுகள் ஏதும் ஏற்பட்டால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள IVA அசோசியேட்ஸ் கோயம்புத்தூர் என்ற நிறுவனத்திற்கு 19.12.2019 அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டு தொடர்ந்து பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ளப்பட்டு வரப்படுகின்றனர். இந்நிலையில் 50 எண்ணம் BOV வாகனங்களில் 13 எண்ணம் வாகனங்கள் மட்டும் முற்றிலும் பழுதுகள் ஏற்பட்டு அதற்கான உதிரிப்பாகங்கள் புதிதாக மாற்ற வேண்டிய நிலை உள்ளதால் பராமரிப்பு பணிகளின் கீழ் வரப்பெறவில்லை. ஆகவே பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி பழுதுகள் ஏற்பட்ட 13 எண்ணம் BOV வாகனங்களை பழுது நீக்கம் செய்து புதிதாக உதிரிபாகங்கள் மாற்றம் செய்யவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.750000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவீனத் தொகையினை இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.3930/2020/இ1)**

**தீர்மான எண். 272**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 6**

கடையநல்லூர் நகராட்சி கல்லாறு தலைமை பணியிடத்தினை சுற்றி சுற்றிச்சுவர் வசதிகள் இல்லை. மேற்காணும் பகுதியில் நகருக்கு குடிநீர் ஆதாரம் உள்ளதால் மேற்படி இடத்தினை அணுகுவதற்கு தார்சாலை வசதிகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளதால் கல்லாறு தலைமை பணியின் சுற்றுலா தலமாக மாறிவருகின்றது. மேலும் மேற்காணும் தலைமை பணியிடம் நகருக்கு குடிநீர் விநியோகம் ஆதாரமாக விளங்குவதால் பொதுமக்கள் யாரும் உள்ளே நுழையாதவாறு அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி கல்லாறு தலைமை பணியிடத்தினை சுற்றி தெற்கு மற்றும் மேற்கு பகுதியில் சுற்றுச்சுவர் வசதிகள் செய்யும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.9,80,000/—க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவீனத் தொகையினை இந்நகராட்சி குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.3123/2020/இ1)**

**தீர்மான எண். 273**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 7**

இந்நகராட்சி பகுதி வார்டு எண்.12, கதவு எண்.97, பஜார் ரோடு முகவரியில் வசிக்கும் திரு.S.S.செய்யது ஜமீன் என்பவர் மேற்படி வீட்டிற்க புதிய குடிநீர் இணைப்பு பெறுவதற்கு 16.10.2019ல் வைப்புத் தொகை ரூ.15000/— செலுத்தியுள்ளார். மேற்படி வீட்டிற்கு ஏற்கனவே குடிநீர் இணைப்பு பொருத்துநர் 1915/2020 தேதி அறிக்கையின்படி குடிநீர் இணைப்பு எண்.141/6174 பயன்படுத்தி வருகிறார். ஆகவே கூடுதலாக செலுத்திய வைப்புத்தொகை ரூ.15000/—ஐ திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 1512 /2020/இ2)**

**தீர்மான எண். 274**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 8**

அரசு ஆணை (நிலை) எண்.170 ஊரக வளர்ச்சி (மற்றும்) உள்ளாட்சித் (ம.அதி.3) துறை நாள்.27.10.2020ல் புரட்சித் தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தை வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு வழங்கிட வருவாய் ஈட்டுபவர் (Bread Winner) மற்றும் பரிந்துரைக்கப்பட்டவர்களின் (Nominee) கூடுதல் விவரங்களை சேகரிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.15/– வீதம் செலவு என்ற அடிப்படையில் (படிவம் பிரிண்ட் ரூ.5/– தகவல் சேகரிப்பு பணி ரூ.5/– பதிவேற்றம் செய்தல் ரூ.5/–) இப்பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்நகராட்சிக்குரிய பட்டியல் சுமார் 14979 குடும்பங்கள் உள்ளதால் இவைகளை பிரிண்ட் செய்யவும் கணக்கெடுப்பு செய்யவும் மற்றும் பதிவேற்றம் செய்யவும் ஏற்படும் செலவினம் 14979 x 15 =ரூ.2,24,685/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

இவ்வலுவலகத்தல் இவைகளை மேற்கொண்டால் அன்றாடம் அலுவலகப்பணிகள் பாதிக்கப்படும் என கணினி உதவி திட்ட அமைப்பாளர் அறிக்கை செய்துள்ளதாலும் மேலும் இப்பணிகளை 20.11.2020க்குள் முடிக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு மேலாண்மை இயக்குநரும் அறிவுரை வழங்கியுள்ளதால்

அ) படிவங்களை பிரிண்ட் செய்யும் பணி மற்றும் பதிவேற்றம் செய்யும் பணியை அவசர அவசியத் தேவையை முன்னிட்டு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று மேற்கொள்ளவும்.

ஆ) கணக்கெடுப்பு பணிக்கு வெளி நபர்கள் ஏற்பாடு செய்திடவும், வெளி நபர்கள் கிடைக்கப்பெறவில்லை எனில் இந்நகராட்சி பணிபுரியும் தூய்மை இந்தியா திட்ட பணியாளர்கள் மற்றும் கொசுப்புழு தடுப்பு பணியாளர்களை பயன்படுத்தி இப்பணியை அவசர அவசியத் தேவையை முன்னிட்டு செய்திடவும் இவர்களுக்கு அரசாணையில் அனுமதிக்கப்பட்டுள்ள தொகை ஒரு படிவத்திற்கு ரூ.5/– என்ற அடிப்படையில் வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 4256/2020/எச்1)**

**தீர்மான எண். 275**

அனுமதிக்கப்பட்டது.

**(ஒம்) P.குமார் சிங்**
**தனி அலுவலர் மற்றும் ஆணையர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**